**தலைப்பு 025 - எல்லை நிர்ணய ஆணைக்குழு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 025 - எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 03 செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 150,000 ஆன முழு ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது. | உரிய குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீடுகள், உள்ளூராட்சிப் பிரிவுகளின் எல்லை நிர்ணயத்திற்கான தேசியக் குழுவின் சார்பில் பெறப்பட்ட ஒதுக்கீடுகள் ஆகும். | முறையான திட்டமிடலுடன் குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீடுகள கோரப்பட வேண்டும். |
| (ஆ) | 02 செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 950,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அச் செலவு விடயங்களின் சேமிப்பு ரூபா 279,127 அதாவது குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் 29 சதவீதம் ஆகும். | உரிய குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீடுகள், உள்ளூராட்சிப் பிரிவுகளின் எல்லை நிர்ணயத்திற்கான தேசியக் குழுவின் சார்பில் பெறப்பட்ட ஒதுக்கீடுகள் ஆகும். | முறையான திட்டமிடலுடன் குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீடுகள கோரப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 16.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில், வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயல்திறன் அறிக்கையின் வரைவொன்றை சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 262(2) | பணம் செலுததப்பட்ட அனைத்து வவுச்சர்களில் மற்றும் கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களில் ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ முத்திரை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இனி வரும் காலங்களில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 24 திகதி கொண்ட இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை | ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்காக மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டம் இவ்வருடத்தில் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பணிகளில் ஒன்றாக ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும், அப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் குறிப்பாக அடையாளம் காணப்படாததுடன் பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கையும் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கையை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சேர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு பணிக்கும் தொடர்புடைய அனைத்து தரவுகளும் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவின் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டில்லாத போதிலும் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கிட்டுச் சட்டத்தில் 2021 மற்றும் 2022 ஆம் வருடங்களில் முறையே ரூபா 14.22 மில்லியன் மற்றும் ரூபா 15.98 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவ் ஒதுக்கீடுகளிலிருந்து முறையே ரூபா 11.13 மற்றும் ரூபா 14.10 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | தொடர்புடைய செலவுகள் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சம்பளம் மற்றும் அத்தியாவசிய மீண்டெழும் செலவுகளுக்காக செய்யப்பட்ட செலவுகள் என்பதுடன் குறிப்பிட்ட பொறுப்பு இதுவரை ஒதுக்கப்படவில்லை என்றாலும், எதிர்காலத்தில, இது தொடர்பான எல்லை நிர்ணய நடவடிக்கைகளுக்கு தேவையான தகவல்கள் மற்றும் தரவுகளை சேகரிப்பதில் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளதுடன், 2022 நவம்பர் முதல் நியமிக்கப்பட்ட | ஆணைக்குழுவிற்கு குறிப்பிடத்தக்க பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படாமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளூராட்சி பிரிவுகளை எல்லை நிர்ணயம் செய்வதற்கான தேசிய குழுவின் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. | |
| (ஆ) | ஆணைக்குழுவிற்காக சட்டமூலம் ஒன்றினை தயாரிக்கும் தேவைப்பாடு தொடர்பாக 2017 மற்றும் 2018 வருடங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனம் வரைவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையில் சட்டமூலத்தினை தயாரிக்கும் நடவடிக்கை முடிக்கப்பட்டிருக்கவில்லை | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவையை இனங்கண்டு மேற்கொண்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | சனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 02 வாகனங்கள், 2016 ஆம் ஆண்டு முதல் ஆணைக்குழுவின் கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதியான 2023 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் இவ் வாகனங்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டிருக்க வில்லை | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள் கையேற்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2016 பெப்ரவரி 05 ஆந் திகதி இலக்கம் DMS/1029 கடிதத்தில் ஆணைக்குழுவிடம் 15 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக அதில் 05 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. சிரேஷ்ட மட்டத்திலான பதவியாகிய செயலாளர் பதவி மற்றும் கணக்காளர் பதவி 2016 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்ததுடன் அவற்றிற்கு 2016 வருடம் முதல் பதில் பணிபுரியும் அடிப்படையில் இரு அதிகாரிகள் இணைக்கப்பட்டிருந்தனர். | ஆணைக்குழுவிற்கு அரசியலமைப்புச் சட்டத்தினாலோ அல்லது வேறு எந்தச் சட்டத்தினாலோ குறிப்பிட்ட கடமைகள் எதுவும் ஒதுக்கப்படாததால், அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் அனைத்தும் முற்றாக நிரப்பப்படாததுடன எதிர்காலத்தில், தேவைக்கேற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படும். செயலாளர் பதவி மற்றும் கணக்காளர் பதவியின் கடமைகள், பதில் பணிபுரியும் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. | செயல்திறனைப் பாதிக்கும் வகையில் அத்தியாவசியப் பதவிகளில் வெற்றிடங்கள் இருந்தால் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |